## 6

# பாடுபடும் ஊழியக்காரர்

## (ஏசாயா 53)

நடபடிகள் 8ம் அதிகாரம், பிலிப்பு என்ற பெயர்கொண்ட ஒரு சுவிசேஷ ஊழியருக்கும், எருசலேம் நகரில் தேவனை ஆராதித்த பின்பு தமது இல்லம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த எத்தியோப்பிய மந்திரிக்கும் இடையிலான ஒரு சந்திப்பைப் பற்றிப் பதிவு செய்துள்ளது. அந்த மந்திரி, ஆராதிப்பதற்கு எருசலேம் சென்றிருந்தார் என்பதால், அவர் யூத மார்க்கத்து அமைந்தவராக இருந்திருக்கலாம். அவர், இஸ்ரவேல் மக்களின் தேவனை ஆராதித்து ஜெப ஆலய வாழ்வில் பங்கேற்றிருந்த, ஆனால் விருத்தசேதனம் பெறாது நிலைத்திருந்த காரணத்தினால் முழுமையும் மனம் மாறாதவர்களாக இருந்த, "தேவனுக்குப் பயந்தவர்கள்" என்று குறிப்பிடப்பட்டவர்களில் ஒருவராக இருந்திருக்கலாம் என்பது இன்னொரு சாத்தியக்கூறாக உள்ளது (காண்க நடபடிகள் 10:1, 2; 13:26). ஆகவே, புறஜாதியைச் சேர்ந்த இவர், எபிரெய தீர்க்கதரிசிகளில் ஒருவரான ஏசாயா எழுதிய புத்தகத்திலிருந்து சில பகுதிகளை வாசித்துக் கொண்டிருந்ததில் வியப்பு எதுவும் இல்லை. அவர் வாசித்துக் கொண்டிருந்த, ஏசாயா 53:7, 8 என்ற வசனப்பகுதி கூட மிகச்சரியாக நமக்குக் கூறப்படுகிறது:

> அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார்,
> ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை;
> அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும்,
> தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும்,
> அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்.
> இடுக்கணிலும் நியாயத்தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார்;
> அவருடைய வம்சத்தை யாரால் சொல்லி முடியும்;
> ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டுபோனார்;
> என் ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார்.

இரதத்தில் இருந்த இந்த எத்தியோப்பிய மந்திரியைப் பிலிப்பு அணுகி, அவர் வாசித்துக் கொண்டிருந்ததைப் புரிந்து கொள்ள அவருக்கு உதவியளிப்பதாகக் கூறியபோது, முதலில் அந்த மனிதர், "தீர்க்கதரிசி யாரைக்குறித்து இதைச் சொல்லுகிறார்? தம்மைக்குறித்தோ, வேறொருவரைக் குறித்தோ? எனக்குச் சொல்லவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார் (நடபடிகள் 8:34). பின்பு பிலிப்பு இந்த வசனப்பகுதியைக் கொண்டு தொடங்கி "இயேசுவைக்குறித்து அவனுக்குப் பிரசங்கித்தார்" என்று வேதாகமம் பதிவு செய்துள்ளது (நடபடிகள் 8:35).

*பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசி ஒருவர், இயேசு பிறப்பதற்கு எண்ணூறு ஆண்டுகள் முற்பட்ட காலத்தில், இயேசுவைக் குறித்தும் அவரது மரணத்தைக் குறித்தும் எவ்வாறு எழுத முடிந்தது? 53ம் வசனத்தை நெருக்கமாகக் கண்ணோக்குதல் இதைப் பற்றி நமக்குக் கூறும்.*

## தீர்க்கதரிசனத்தின் அமைவு

தாவீதின் மரணத்தைத் தொடர்ந்து, அவரது மகனான சாலொமோனுடைய கைகளுக்குள், இஸ்ரவேல் நாட்டின் அரியணை சென்று சேர்ந்தது (1 இராஜாக்கள் 1; 2). இந்தக் காலக்கட்டத்தின் போது, இஸ்ரவேல் நாடு இன்னும் அதிகம் வளம்கொண்ட மற்றும் வல்லமைநிறைந்த நாடாயிற்று, இருந்த போதிலும், சாலொமோனின் ஆளுகையினுடைய முடிவின் போது, விக்கிரக ஆராதனையைச் சாலொமோன் சகித்துக்கொண்டது (மற்றும் அதை ஊக்குவித்ததும்கூட) என்பவற்றின் காரணமாக, இஸ்ரவேல் நாட்டிற்கு எதிராக விரோதிகள் எழும்புவதைத் தேவன் அனுமதித்தார் (1 இராஜாக்கள் 11). சாலொமோனுடைய மரணத்திற்குப் பின்பு, அவரது மகன் ரெகொபெயாம் அரசாட்சியை மேற்கொண்டார், ஆனால் அவர் ஞானமற்ற வகையில் இராஜ்யத்திற்குள் பூசல் ஒன்றை விரைவிலேயே நிகழச் செய்தார். இது நாடானது வடக்கு இராஜ்யம் மற்றும் தெற்கு இராஜ்யம் என்று பிரிவதை விளைவித்தது, இவை ஒவ்வொன்றும் தங்களின் சொந்த அரசர்களின் வம்சாவழியைக் கொண்டிருந்தன. (தெற்கு இராஜ்யத்தின் அரசர்கள் மாத்திரமே தாவீதின் வம்சாவழியில் வந்தவர்களாய் இருந்தனர்.) வடக்கு இராஜ்யம் பொதுவாக "இஸ்ரவேல்" என்றும் தெற்கு இராஜ்யம் "யூதா" என்றும் அழைக்கப்பட்டன, ஏனெனில் தெற்கு இராஜ்யத்தில் முதன்மையாக யூதா கோத்திரத்தாரும் மற்றும் மிகவும் சிறிய கோத்திரமான பென்யமீன் கோத்திரத்தாரும் இருந்தனர். இரு அரசுகளுமே தேவனுடைய பிரமாணத்தைக் கைவிட்டு, அந்நிய தேவர்களிடமாகத் திரும்பிக் குற்றப் பட்டிருந்தன மற்றும் தேவன், அவர்கள் தங்கள் வழிகளை மாற்றிக்கொள்ளாதிருந்தால், அவர்கள் மீது வரவிருந்த பேரழிவைப் பற்றி அவர்களை எச்சரிப்பதற்குத் திரும்பத் திரும்பத் தீர்க்கதரிசிகளை அனுப்பினார்.

ஏசாயா, கி.மு. எட்டாவது நூற்றாண்டின் பிற்பாதியில், யூதா மற்றும் எருசலேமில் இருந்த மக்களுக்குத் தேவனுடைய செய்தியை அறிவித்தார் (ஏசாயா 1:1), இது தாவீதின் ஆட்சிக் காலத்திலிருந்து, ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின்னால் நடந்ததாகும். இது இஸ்ரவேல் வரலாற்றில் பதற்றமான காலமாக இருந்தது: கி.மு. 722/721ல் வடக்கு இராஜ்யத்தை (இஸ்ரவேலை) அசீரியா கைப்பற்றி இருந்தது. தெற்கு இராஜ்யத்தின் (யூதாவின்) எதிர்காலம் இப்போது நிச்சயமற்றதாகக் காணப்பட்டது.

ஏசாயா தீர்க்கதரிசனப் புத்தகத்தின் முதல் முப்பத்து ஒன்பது அதிகாரங்கள், யூதா தேசத்தார் தேவனுடைய பிரமாணத்தைப் புறக்கணித்த காரணத்தினால் அவர்கள்மீது அவர் கொண்டுவரத் திட்டமிட்டிருந்த நியாயத்தீர்ப்பைப் பற்றிய கருத்துக்கள் முதன்மையாக உள்ளன. கி.மு. 586ல் பாபிலோனியர்கள் எருசலேமை மிதித்து, சாலொமோன் அரசரால் கட்டப்பட்ட தேவாலயத்தை அழித்து, பெருந்தொகையான இஸ்ரவேல் மக்களை அவர்களின் தாய் நாட்டில் இருந்து பாபிலோனுக்கும் மற்ற இடங்களுக்கும் கூட்டிச் சென்றபோது அந்த

அழிவின் உச்சநிலை நடைபெற்றது.

இருப்பினும், நாம் ஏசாயா 40ம் அதிகாரத்தைப் படிக்கத் தொடங்குகையில், முந்திய அதிகாரங்களின் தொனி மற்றும் பாடக்கருத்தில் இருந்து கவனிக்கத்தக்க ஒரு மாற்றம் உள்ளது. ஏசாயா 40:1ம் வசனம், "என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள் ... என்று உங்கள் தேவன் சொல்லுகிறார்" என்று வாசிக்கப்படுகிறது. ஏசாயா புத்தகத்தின் எஞ்சியபகுதியானது தேவன், தாம் தேர்ந்து கொண்ட மக்களை நிறைவாக மீளக்கட்டுவித்தல் பற்றிய ஆய்வுக்கருத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

## தீர்க்கதரிசனத்தின் பாடக்கருத்து: பாடுபடும் ஊழியக்காரர்

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இந்த ஆறுதலில் அதிகமான பகுதி, இஸ்ரவேல் மக்கள் செய்யத் தவறியிருந்த யாவற்றையும் செய்து அவர்கள் மீளக்கட்டுவிக்கப்படுதலுக்குக் கருவியாக இருக்கப்போகும், கர்த்தருடைய மிகச்சிறந்த "ஊழியக்காரருடைய" ஊழியத்தின் மூலம் வரும் என்று ஏசாயா கூறினார். இந்த ஊழியக்காரர், "ஊழியக்காரர் பாடல்கள்" என்று அடிக்கடி அழைக்கப்படுகிற குறைந்த பட்சம் நான்கு வேதவசனப் பகுதிகளில் முக்கியமான உருவகமாக இருக்கிறார். ஏசாயா 42:1-4; 49:1-13; 50:4-11; 52:13-53:12 ஆகியவை இவ்வசனப்பகுதிகளாக உள்ளன, இவற்றில் கடைசியில் உள்ள வசனப்பகுதியில் நடபடிகள் 8ல் எத்தியோப்பிய மந்திரி வாசித்த வசனப்பகுதி உள்ளடங்குகிறது.

குறிப்பாக ஏசாயா 53ம் அதிகாரம் ஊழியக்காரரின் துன்பத்தைச் சித்தரிக்கிறது: அவர் தேவனால் அனுப்பப்பட்டிருந்தும் சொந்த மக்களால் புறக்கணிக்கப்பட்டார். அவர் அசட்டை பண்ணப்பட்டவரும் மக்களால் புறக்கணிக்கப்பட்டவருமாக இருந்தார் - இருப்பினும் அவரது பாடுகள் யாவற்றின் மூலமாகவும், ஆச்சரியத்திற்குறிய சில விஷயங்கள் நடந்து கொண்டிருந்தன. அவர் மற்றவர்களால் செய்யப்பட்ட தவறுகளுக்காகத் துன்பம் அனுபவித்துக் கொண்டிருந்தார். தீர்க்கதரிசியைப் பொறுத்தமட்டில், இவையாவும் மற்றவர்களின் இரட்சிப்பிற்காகச் செயல்படும் தேவனுடைய முழுமையான திட்டத்தில், ஏதோ ஒருவகையில் பொருந்தின. அந்த ஊழியக்காரரின் உண்மை நிறைந்த கீழ்ப்படிதலின் விளைவாக, அவர் ஏற்ற காலத்தில் உயர்த்தப்படுவார்.

ஏசாயா 53ம் அதிகாரம், இயேசு மற்றும் அவரது பாடுகள் என்ற உண்மைக்கு நீண்ட காலத்திற்கு முன்பே எழுதப்பட்டிருந்தாலும், அது அவரையும் அவரது பாடுகளையுமே குறிக்கிறது என்று புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் ஒருமுகமாகப் புரிந்து கொண்டனர். புதிய ஏற்பாட்டின் கருத்து நோக்கில் இருந்து, இஸ்ரவேல் மக்களின் நல்வாய்ப்புக்கள் மறுகட்டுமானம் செய்யப்படுதல் என்பது இராணுவ பலத்தினாலோ அல்லது அரசியல் மேலாதிக்கத்தினாலோ அல்ல, ஆனால் தேவனுடைய சொந்த மகன் என்ற ஊழியக்காரரின் பாடுகளினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்தது. மேலும் இந்த ஊழியக்காரர், இஸ்ரவேல் மக்களுக்கு மாத்திரமல்ல ஆனால் எல்லா மக்களினங்களுக்கும் மீட்பரானார் - மற்றும் அவர் கொண்டு வந்த "மீட்பு" என்பது சரீரகுணமளித்தலில் இருந்து ஆவிக்குரிய இரட்சிப்பு வரையிலும் பரவுகை கொண்டிருந்தது. இஸ்ரவேல் மக்கள் இந்த ஊழியக்காரரின் அடையாளம் பற்றி நிச்சயம்

அற்றவர்களாக இருந்திருக்கலாம், ஆனால் இவர் இயேசுதாம் என்பதில், புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் முழுநிச்சயமாக இருந்தனர்.

உதாரணமாக, மத்தேயு 8:14-17ல் பேதுருவின் மாமியை இயேசு குணமாக்கிய நிகழ்ச்சி பற்றிய விபரத்தின் முடிவுப் பகுதியில், "அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்த்ததரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது" என்று நாம் வாசிக்கிறோம், இது ஏசாயா 53:4ல் உள்ள ஒரு மேற்கோளாகும். அதுபோலவே, இயேசுவினால் நிகழ்த்தப்பட்ட அடையாளங்கள் மீது யூதர்கள் கொண்டிருந்த அவிசுவாசத்தைக் குறிப்பிடுதலில், ஏசாயா 53:1ஐ யோவான் மேற்கோள் காண்பித்தார்: "கர்த்தாவே, எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? …" (யோவான் 12:36ஆ-41). கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்திற்காகத் துன்புற மனவிருப்பமாக இருக்கும்படி அழைக்கும் அழைப்பில் பேதுரு, ஏசாயா 53ல் இருந்து ஒரு வசனத்தை எடுத்துப் பொழிப்புரை செய்து, பின்வரும் வார்த்தைகளுடன் தமது குறிப்புரைகளை முன்னுரையாகக் கொடுத்தார்: "இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்" (1 பேதுரு 2:21). எனவே, ஏசாயா 53ம் அதிகாரம், இயேசுவைப் பற்றியும் அவரது வருகையைப் பற்றியும் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் எவ்வளவு தெளிவாகப் பேசினர் என்று காண்பிக்கும் காரணத்தினால், இது ஒரு திறவுகோல் வசனமாக உள்ளது.

## அவர் புறக்கணிக்கப்படுதல் (53:1-3)

ஏசாயா 53ம் அதிகாரம், இயேசு புறக்கணிக்கப்படுதல் என்ற பாடுகளை அனுபவிப்பார் என்று முதலில் முன்னுரைத்தது. வசனப்பகுதியின் முதல் மூன்று வசனங்கள், பாடுபடும் ஊழியக்காரர் புறக்கணிக்கப்படுதலைப் பற்றியதாக இருக்கிறது. 1ம் வசனம், "எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்?" என்று கேட்கிறது. இது பின்வரும் தெளிவான பதிலைக் கொண்ட சொல்லாட்சித் திறன் வாய்ந்த ஒரு கேள்வியாக உள்ளது: "பலர் அல்ல." இதில் ரோமர் 10:16 பவுல் பிரசங்கித்ததைக் கேட்ட யூதர்களில் ஒரு சிறுகுழுவினர்தாம் அறிவிக்கப்பட்ட செய்தியை விசுவாசிக்க மனவிருப்பம் கொண்டிருந்தனர் என்று சுட்டிக்காண்பித்ததில், பவுல் இதே வசனத்தைத் தான் மேற்கோள் காண்பித்தார். ஏசாயா 53:2ம் வசனம், இந்த ஊழியக்காரர் (இயேசு) "அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை; அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது" என்று கூறுகிறது. 2ம் வசனமானது, இயேசு விரும்பத் தக்க உடல்தோற்றம் கொண்டிருக்கவில்லை என்று அர்த்தப்படுவதாக அடிக்கடி விளக்கி உரைக்கப்பட்டாலும், இது அவரது காலத்தில் இருந்தவர்கள் அவரைப் பற்றி மேம்போக்காக முடிவுசெய்ய விருப்ப நோக்கம் கொண்டிருந்ததை, அவரைப்பற்றிய "விசேஷமான" எதையும் காணாதிருந்து, அதனால் அவருக்குள் உண்மையில் இருந்தது என்ன என்பதைக் காணத்தவறியதைச் சுட்டிக்காண்பிக்கவே அதிகம் வாய்ப்புள்ளது. பின்பு 3ம் வசனம், "அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அனுபவித்த

வருமாயிருந்தார்; ... அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம்" என்று கூறுகிறது.

இதுவே இயேசுவைப் பற்றி உண்மையாக இருந்துள்ளதாகப் புதிய ஏற்பாடு வெளிப்படுத்துகிற மிகச்சரியான விஷயமாக உள்ளது: அவர் மேசியாவாக வந்த யூத மக்களில் பெரும்பான்மையினரால் அவர் புறக்கணிக்கப்பட்டார். உண்மையில் "புறக்கணிக்கப்படுதல்" என்பது யோவான் சுவிசேஷத்தின் முக்கிய ஆய்வுக்கருத்துக்களில் ஒன்றாக உள்ளது, இந்த சுவிசேஷத்தின் தொடக்க அதிகாரத்தில் உள்ள இந்த வசனங்களில் இது சுட்டிக்காண்பிக்கப்படுகிறது:

> உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி. அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை. அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை (யோவான் 1:9-11).

இந்தப் புறக்கணிப்பு இன்னும் நடந்து கொண்டுள்ளது! பாடுபடும் ஊழியக்காரரான இயேசு தமது சொந்தக் காலத்தில் போன்றே, சுயமையங்கொண்ட, சுயத்திற்கு ஊழியம் செய்கிற, சுயத்தைப் பெரிதாக்கும் மனநிலையால் மேற்கொள்ளப்பட்டுள்ள, இன்றைய நாட்களின் நமது உலகத்திற்கும் விரும்பத் தக்கவராக இருப்பதில்லை; எனவே அவர், மக்களின் பெரும்பான்மையினரால் புறக்கணிக்கப்படுகிறார். அவர் ஒரு வல்லமை நிறைந்த ஆட்சியாளராக, செல்வமிக்க வர்த்தகத் தலைவராக, திறமை வாய்ந்த ஒரு விளையாட்டு வீரராக அல்லது கவர்ச்சி நிறைந்த பொழுதுபோக்கச் செய்பவராக வந்து இருந்தால், அவர் ஒரு பெருங்கூட்டமான பின்பற்றாளர்களை இழுத்திருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை. ஆயினும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, ஏசாயா 53ம் அதிகாரத்தின், இந்தப் பாடுபடும் ஊழியக்காரர் இருந்ததைக் காட்டிலும் அதிகம் "பிரபலமானவராக" அவர் இன்றைய நாட்களில் இருப்பதில்லை.

## (மற்றவர்களுக்கு) பதிலாக அவருடைய பாடுகள் (53:4-6)

இயேசு மற்றவர்களுக்காகப் பாடு அனுபவிப்பார் என்றும் ஏசாயா 53ம் அதிகாரம் முன்னுரைத்தது. 4 முதல் 6 வரையிலான வசனங்கள், ஊழியக்காரரின் பாடுகள், தீர்த்ததரிசி உட்பட மற்றவர்களின் சார்பில் அனுபவிக்கப் படுவதாக இருக்கும் என்று வலியுறுத்துகின்றன. இதைக் கவனமாக வாசிப்பவர், "நாம்," "நமக்கு" மற்றும் "நம்முடைய" என்ற வார்த்தைகள் இவ்வசனங்களில் பத்து முறைகள் வருவதைக் காண்பார். "மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார் ... அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்." இயேசுவின் பாடுகளினுடைய இந்த அம்சத்தை இறையியலாளர்கள், "பதிலாகச் செய்தல்" அல்லது "பிரதிப் பரிகாரம்" என்று குறிப்பிடுகின்றனர், இந்தச் சொல்விளக்கங்கள், இயேசு நமக்காகத் தண்டனையைச் சுமந்தார் என்று அர்த்தப்படுத்துகின்றன. சிலுவையில் அவரது பாடுகள் மற்றும் மரணத்தில், நாம் பெறத் தகுதியான தண்டனையை

*நம் சார்பில் அவர் அனுபவித்தார்.*

*இயேசுவின் சிலுவையைப் பற்றியும் உலகத்தில் பாவங்களுக்கு அவரது மரணத்தைப் பற்றியும் புதிய ஏற்பாடு கூறும் யாவுமாக உள்ளது பின்வருமாறு:*

> *நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமதுசரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள் (1 பேதுரு 2:24).*

> *என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார் (1 யோவான் 2:1, 2).*

> *தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது. பிரியமானவர்களே, தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம் (1 யோவான் 4:9-11).*

> *அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே (ரோமர் 5:6-9).*

*பின்வருவது நமது இருதயங்களுக்குப் பிரியமானதாக இருக்கும் சுவிசேஷச் செய்தியின் பாகமாக உள்ளது: கிறிஸ்து நமக்காகப் பாடு அனுபவித்து மரித்தார் என்ற சத்தியம். இந்தக் கருத்தை இன்னும் அதிகம் தெளிவாகக் காண்பதற்கு, ஏசாயா 53ம் அதிகாரத்தில் தன்மை ஒருமைப் பெயர்ச்சொற்களை அமைத்து வாசித்தல் உதவிநிறைந்ததாக உள்ளது: "மெய்யாகவே அவர்* ***என்னுடைய*** *பாடுகளை ஏற்றுக்கொண்டு,* ***என்னுடைய*** *துக்கங்களைச் சுமந்தார் …* ***என்னுடைய*** *மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு,* ***என்னுடைய*** *அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார் … அவருடைய தழும்புகளால்* ***குணமாகிறேன்."***

## அவர் தவறாக நடத்தப்படுதல் (53:7-9)

*இத்துடன் கூடுதலாக ஏசாயா, இயேசு அநீதியாகப் பாடு அனுபவிப்பார்*

என்று காண்பித்தார். 7 முதல் 9 வரையிலான வசனங்கள், இந்த ஊழியக்காரர் மற்றவர்கள் சார்பாகச் சகிக்க வேண்டியதாக இருந்த பாடுகளின் முழுமையான அநீதியைப் பற்றிக் கூறுகின்றன. அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனால் அவையாவும் அவர் செய்திருந்த ஏதொரு விஷயத்தின் காரணத்தினாலும் அல்ல என்று ஏசாயா கூறினார். 7ம் வசனம், அவரது பலியின் தன்னார்வ இயல்பை வலியுறுத்துகிறது: அவர் பாடு அனுபவிக்கையில் மறுப்பு அல்லது எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் "தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை." அவரது ஜீவன் அவரிடத்தில் இருந்து எடுத்துப்போடப்பட்டது, மற்றும் "அவர் கொடுமை செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை" (53:9ஆ) இருப்பினும் அவரது சவ அடக்கம்கூடச் சிறுமைப்படுத்துதலின் செயலாகவே இருந்தது.

ரோம ஆளுநராக இருந்த பிலாத்து என்பவர் முன்பாக இயேசு விசாரிக்கப்படுதல் பற்றிய லூக்கா சுவிசேஷ விபரத்தில் நாம் இதே வலியுறுத்தத்தைக் காணுகின்றோம். பிரதான ஆசாரியர்களாலும் அவர்களைப் பின்பற்றியவர்களாலும் இயேசுவுக்கு எதிராகக் குற்றச்சாட்டுகள் கொண்டு வரப்பட்டபோதிலும், பிலாத்து, "இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை" என்று உரைத்தார் (லூக்கா 23:4). பிற்பாடு இயேசுவைப் பரிசோதிப்பதற்காக, யூதர்களின் அரசரான ஏரோதிடம் அனுப்பி வைத்த பின்பு பிலாத்து பிரதான ஆசாரியர்கள் மற்றும் யூத மக்களின் அதிபதிகள் ஆகியோரை அழைப்பித்துப் பின்வருமாறு உரைத்தார்:

> ஜனங்களைக் கலகத்துக்குத் தூண்டிவிடுகிறவனாக இந்த மனுஷனை என்னிடத்தில் கொண்டுவந்தீர்கள்; நான் உங்களுக்கு முன்பாக விசாரித்தபோது, இவன்மேல் நீங்கள் சாட்டுகிற குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடத்தில் காணவில்லை. உங்களை ஏரோதினிடத்திற்கும் அனுப்பினேன்; அவரும் இவனிடத்தில் குற்றம் காணவில்லை; மரணத்துக்கேதுவாக இவன் ஒன்றும் செய்யவில்லையே. ஆனபடியால் இவனைத் தண்டித்து, விடுதலையாக்குவேன் (லூக்கா 23:13-16).

யூதத்தலைவர்கள், பரபாஸை விடுவித்து இயேசுவைச் சிலுவையில் அறையும்படி வற்புறுத்திய போது, பிலாத்து திகைப்புற்று சலிப்புற்று, "ஏன் இவன் என்ன பொல்லாப்புச் செய்தான்? மரணத்துக்கு ஏதுவானகுற்றம் ஒன்றும் இவனிடத்தில் நான் காணவில்லையே" என்று (லூக்கா 23:22). வியப்புற்றார். கடைசியில் பிலாத்து, அவர்களின் வற்புறுத்துதலுக்கு இணங்கி, கொலைகாரன் என்று அறியப்பட்டு இருந்த பரபாஸை விடுவித்து இயேசுவைச் சிலுவையில் அறைய ஒப்புக்கொடுத்தார்.

இதை நாம் வாசிக்கையில், இவை யாவற்றினுடைய அநீதியான பண்பினால் நாம் தாக்கப்படுகிறோம். அதுவே மிகச்சரியானக் கருத்தாக உள்ளது! இரட்சிப்பு என்பது நீதியைப் பற்றிய விஷயமாக இருப்பதில்லை; அது இரக்கத்தைப் பொறுத்த விஷயமாக உள்ளது. நமது சொந்த பாவங்களுக்கு நாமே பாடுகள் அனுபவிக்க வேண்டும் என்றே நீதி கோரும். இருப்பினும் சிலுவையின் காரணமாக நாம் இரட்சிக்கப்பட முடியும். இயேசு, தாம் அனுபவிக்கத் தேவையற்ற ஒரு தண்டனையை பெற்றுக்கொள்ள மனவிருப்பம்

கொண்டிருந்தார், மற்றும் அதில் நடக்க இருந்த எல்லாவற்றையும் ஏசாயா முன்னதாகவே கண்டார்.

## அவர் மகிமைப்படுதல் (53:10-12)

ஏசாயாவின் கூற்றுப்படி, இயேசுவின் பாடுகள் மகிமைக்கு வழிநடத்தும். 53ம் அதிகராம், துன்புறும் ஊழியக்காரரின் உரிமையை நிறுவாமல் விடுவதில்லை. இந்த அதிகாரத்தின் கடைசி மூன்று வசனங்களில் நாம், நம்பிக்கை நிறைந்த வாக்குத்தத்தங்களைக் காணுகிறோம்:

> அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரணபலியாக ஒப்புகொடுக்கும்போது,
> அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்தநாளாயிருப்பார்;
> கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்.
> அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்;
> என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்;
> அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார்.
> அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி,
> அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு,
> அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து,
> அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டதினிமித்தம்
> அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்;
> பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார் (53:10ஆ-12).

இதையே பிற்பாடு இயேசுவின் பாடுகளின் விளைவுகளாகப் பவுல் ரோமர் 4:1-8ல் மிகச்சரியாக விளக்கப்படுத்தினார். உண்மையில் நாம் தண்டனை பெறத் தகுதியான பாவிகளாக இருந்த போதிலும், இயேசுவின் மீது விசுவாசத்தினால் நாம் நீதிமான்கள் என்று எண்ணப்படுகிறோம் என்று அவர் கூறினார். ஏசாயா 53ல் உள்ள கடைசி மூன்று வசனங்களிலும், இயேசுவின் உயிர்த்தெழுதல் பற்றிய மறைமுகமான முன்னுரைத்தல் ஒன்றுள்ளது. அவர் "ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டுபோனார்" (53:8) என்றாலும், அவர் எதிர்காலத்தில் "அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்தநாளாயிருப்பார்." 11ம் வசனம், "அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்" என்று கூறுகிறது. அவர் சாதித்த செயலின் காரணமாக அவர் மேன்மைப்படுத்தப்படுவார் ("பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார்"; 53:12அ). இது, இந்த உண்மைக்குப் பின்பு, பிலிப்பியர் 2:9-11ல் பவுல் கூறியதற்கு மிகவும் நெருங்கிய தொடர்புடையதாக உள்ளது:

> ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.

*எனவே பாடுபடும் ஊழியக்காரரைப் பற்றிய ஏசாயாவின் வார்த்தைகள், இயேசு சிலுவையில் அனுபவிக்க இருந்த துன்பங்களின் ஒரு முன்நிழல் இடுதலாக இருந்தன. அவைகள், அவர் சகித்துக் கொள்ள இருந்தவற்றை மட்டுமல்ல, ஆனால் அவ்வாறு செய்வதில் அவர் நமக்காக நிறைவேற்ற இருந்தது என்ன என்பதையும் பிரதிபலித்தன.*

---

## இயேசு, பரிபூரணமான பாவ நிவாரண பலி

*துன்புறும் ஊழியக்காரரின் குற்றம் அறியாத்தன்மையை வலியுறுத்தியதில், ஏசாயா 53ம் அதிகாரம், புதிய ஏற்பாட்டில் உள்ள சிலவற்றை வெளிப்படையாக்குகிறது: இயேசு (முழுமையும் தெய்வீகமானவராக இருந்தது போன்றே; யோவான் 1:1; கொலோசெயர் 2:9; எபிரெயர் 1:8) அவர் முழுமையும் மனிதராக இருந்தபோதிலும், அவர் முற்றிலும் பாவம் இல்லாதவராக இருந்தார்.*

*இயேசுவின் வெளிப்படையான ஊழியம், அவர் வனாந்திரப் பகுதியில் நாற்பது நாட்கள் சோதிக்கப்பட்ட பின்பு மாத்திரமே தொடங்கிற்று, அங்கே அவர் தமக்கு சாத்தான் அளிக்கக் கூடிய மோசமான ஒவ்வொரு விஷயத்தையும் எதிர்த்து நின்றார் (மத்தேயு 4:1-11; லூக்கா 4:1-13). பவுல், "நாம் அவருக்குள் (தேவனுக்குள்) தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை (இயேசுவை) நமக்காகப் பாவமாக்கினார்" என்று எழுதினார் (2 கொரிந்தியர் 5:21). "பாவமாக்கினார்" என்ற சொற்றொடர், அவர் பாவத்தினால் குற்றப்பட்டார் என்றல்ல ஆனால் அவர் உலகத்தின் பாவங்களுக்கான விளைவைச் சுமந்தார் என்றே அர்த்தப்படுகிறது. அதுபோன்றே, 1 யோவான் 3:5ம் வசனம், "அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள்; அவரிடத்தில் பாவமில்லை" என்று கூறுகிறது.*

*விசுவாசிகள் எதிர்த்து நிற்காமல் பாடுகளைச் சகித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்வதில் பேதுரு, "அவர் (இயேசு) பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை" என்று கூறினார் (1 பேதுரு 2:22).*

*இயேசுவின் பாவமற்ற தன்மை பற்றிய மிகவும் வெளிப்படையான கூற்று எபிரெயர் 4:15ல் காணப்படுகிறது எனலாம்: "நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்."*

*இயேசு பாவமற்ற தன்மையினால் மாத்திரமே, நமக்காகப் பூரணமான பாவநிவாரண பலியாக, மோசேயின் பிரமாணத்தில் கேட்டுக் கொள்ளப்பட்ட படியான (லேவியராகமம் 3; 4), "குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாக" (1 பேதுரு 1:19) இருக்க முடிந்தது.*